### கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை - ஓர் ஆண்டு நிறைவு!

# பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றி சாதனை!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் பெருமிதம்!



சென்னை, ஜூன் 16-

சென்னை - கிண்டியில், ‘கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவ மனை’ தொடங்கப்பட்டு நேற்றுடன் ஓராண்டு நிறைவுற்றது. அதனையொட்டி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்த அறிக்கையில், “கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவ மனை, கடந்த ஓராண்டில் பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றி சாதனை படைத்துள்ளது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்களால் 15.06.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் சென்னை, கிண்டி கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.240.54 கோடியில் கட்டிடம் மற்றும் ரூ.146.52 கோடி மதிப்பீட்டில் அதிநவீன உபகரண வசதியுடன் 6 இலட்சம் சதுர அடியில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை ஓர் ஆண்டு நிறைவில் பல்லாயிரம் உயிர்களை காப்பாற்றி சாதனை படைத்துள்ளது.

“மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்”

-எனும் திருக்குறளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரை

“ஆகா! இவனைப்பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெறும்பேறு“ என்று ஒரு மகன் புகழப்படுவதுதான், அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக்கூடிய கைம்மாறு எனப்படும் எனும் குறள் மற்றும் பொருளுக்கு ஏற்ப நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் என்றால், அவருடைய மகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 07.05.2021 அன்று அமைக்கப்பட்ட திராவிட மாடல் ஆட்சி பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்தையும், கல்வியையும் தன் இரு கண்களாக பாவித்து பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார்.

‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு’ பதம் என்பது போல் மருத்துவத்துறையின் பல்வேறு சாதனைகளில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையின் ஓர் ஆண்டு சாதனையை விளக்கும் அறிக்கை.

**கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள உயர்சிறப்பு மருத்துவத் துறைகள்:** இருதயவியல் மருத்துவத் துறை, இருதயம் மற்றும் நுரையீரல் அறுவை சிகிச்சைத்துறை. நரம்பியல் மருத்துவத் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சை, புற்று நோய் மருத்துவப்பிரிவு, புற்று நோய் அறுவை சிகிச்சைப்பிரிவு, இரைப்பை குடல் நோய் மருத்துவம், இரைப்பை குடல் நோய் அறுவைச் சிகிச்சைத்துறை, சிறுநீரக மருத்துவம், சிறுநீரக அறுவை சிகிச்சை, இரத்தநாள அறுவை சிகிச்சை, நுண்துளை மூளை இரத்த நாள கதிரியல் பிரிவு ஆகிய துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இம்மருத்துவமனையில் சிறப்பு மருத்துவத்துறை பிரிவு களாக அவசர சிகிச்சை, மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு, மைய ஆய்வகம், இரத்த வங்கி, கதிரியிக்கவியர் பிரிவு(CT.MRI. ULTRA SOUND SCAN DIGITAL XRAY), இயன் முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு போன்ற பிரிவுகள் உள்ளன.

இம்மருத்துவனையில் உள்ள உயர்சிறப்பு மருத்துவ வசதிகள் இருதய கேத் லேப், மூளை இரத்தநாள கேத்லேப், அதிதீவிர சிகிச்சை பிரிவு, 15 உயர்சிறப்பு அறுவை அரங்குகள் போன்ற மருத்துவ வசதிகள் உள்ளன.

இந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஆண்டு முடிவில் பயன் பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை: புறநோயாளிகள் 2,21,434, உள்நோயாளர்கள் 63,505, இது வரை நடைபெற்ற அறுவை சிகிச்சைகள் 2,179, ஆஞ்கியோகிராம் 521, டயாலிசிஸ் 6,968, ஆய்வக பரிசோதனைகள் 7,72,558, சிடி.ஸ்கேன் 7,247, எண்டோஸ்கோப்பி 2,004, எக்ஸ்ரே 10,168, எக்கோ பரிசோதனைகள் 17,349 என்கின்ற எண்ணிக்கையில் ஓர் ஆண்டில் பயன்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் அவர்களின் தொடர் அறிவுறுத்தலின்படி, பல்வேறு உபகரணங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அவை அதிநவீன 1.5 டெஸ்லா ஆட்டோ MRI - Double Baloon Endoscopy ஆகிய வசதிகள் துவங்கப்பட்டு சிறப்பான முறையில் மருத்துவச் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 04.01.2024 அன்று ரூ.6.74 கோடி செலவில் அதிநவீன இருதய கேத்லேப் ஆய்வகம் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**கட்டணப்படுக்கை பிரிவு (pay ward)**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய 70 தனி அறைகள் பயன்பாட்டில் உள்ளது. இந்த கட்டணப் படுக்கை பிரிவில் உள்ள வசதிகள்: குளிர்சாதன வசதி, வெந்நீர் உபகரணத்துடன் கூடிய தனி குளியல் மற்றும் கழிவறைகள், நவீன தீவிர சிகிச்சை பிரிவு கட்டில், அறையில் ஆக்சிஜன் மற்றும் மானிட்டர் உபகரணம், உடனிருக்கும் உறவினர் படுக்கும் சிறிய கட்டில் வசதி, செவிலியரை அழைக்கும் Nurse Call System அதாவது செவிலியர்கள் 24 மணிநேரமும் பணியில் இருக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகளுடன் உள்ள தனியார் மருத்துவமனையுடன் ஒப்பிடும் போது இதன் கட்டணம் மிக குறைவாக உள்ள வகையில் கட்டணமானது Single Room ரூ.1200/-ம் Deluxe Room ரூ.2000/-ம் Super Deluxe Room - ரூ.3000/- என்று பெறப்பட்டு பொது மக்கள் அதிநவீன சிகிச்சை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**நவீன Modular அறுவை அரங்குகள்**

இந்த Modular அறுவை அரங்களானது நரம்பியல், புற்றுநோய், இருதய அறுவை சிகிச்சை, இரத்த நாள அறுவை சிகிச்சை, இரைப்பை மற்றும் குடல் அறுவை சிகிச்சைகள், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகள் முற்றிலும் நோய் தொற்று நீக்கப்பட்டு நோயாளர்களுக்கு நோய் கிருமி தொற்று ஏற்படா வண்ணம் Laminar Air Flow என்னும் AC குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறுவை அரங்குகளாகும். மேலும் அறுவை அரங்குகளின் சுவர்கள் நோய் கிருமிகள் படியா வண்ணம் தனித்துவமான உலோகம் மற்றும் பூச்சுகளால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மருத்துவமனையில் உள்ள அறுவை அரங்குகளில் பல்வேறு நவீன உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன அறுவை அரங்கு விளக்கு கள், அறுவை அரங்கு டேபிள், மயக்க மருந்து அளிக்கும் உபகரணங்கள், மானிட்டர் கருவிகள், லேப்ராஸ்கோப்பி, ஸ்கேன் கருவிகள் அடங்கும். சிறப்பம்சமாக இருதய அறுவை சிகிச்சை செய்ய பயன்படும் Heart lung Machine, துல்லியமான மூளை நரம்பியல், புற்று நோய் மற்றும் கல்லீரல் செய்ய பயன்படும் CUSA (யூசா) எனப்படும் இயந்திரம், மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான பிரத்யேகமான 3D Operating Microscope மற்றும் அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கு பயன்படும் HIPEC உபகரணம் கொண்டு உயர்தர நவீன அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகிறது. இந்த HIPEC அதிநவீன அறுவை சிகிச்சையானது தனியார் மருத்துவமனைகளில் ரூ.15 இலட்சம் செலவில் செய்யப்படுகிறது. தற்போது தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. மேலும் 50 நவீன தீவிர சிகிச்சை படுக்கை வசதிகளில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்” கலைஞர் உரை

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் எனும் திருக்குறளுக்கு ஏற்ப மருத்துவத்துறையை கட்டமைத்து வரும் முதலமைச்சரின் சாதனைகளின் மூலம் பயனடைந்தோர் பல்லாயிரம் பேர் திராவிட மாடல் ஆட்சியை வாழ்த்தி நன்றி நவில்கின்றனர்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் பகுதியில் உள்ள கீச்சலம் செங்காளபள்ளி கிராமத்தில் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திர உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று

# பம்மல் தெற்கு பகுதியில் டி.ஆர்.பாலு எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா முன்னிலை! வே.கருணாநிதி வேண்டுகோள்!

சென்னை ஜூன் 16-

பம்மல் தெற்கு பகுதி செயலாளர்தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் வே.கருணாநிதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர்,குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று (16.06.2024) ஞாயிற்றுகிழமை மாலை 3 மணியளவில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர்,கழக பொருளாளர் டி.ஆர்.பாலு பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மாலை 3 மணியளவில் பம்மல் பொழிச்சலூர் மெயின் ரோடு நேரு நகரில் இருந்து புறப்பட்டு பம்மல் இரட்டை பிள்ளையார் கோவில் மற்றும் நாகல்கேணி போலீஸ் பூத் அருகில் இரு இடங்களிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி,தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்தாம்பரம் மாநகர செயலாளர் செயலாளர் எஸ். ஆர். ராஜா,தாம்பரம் மாநகராட்சி மேயர்மாநகர துணை செயலாளர் க.வசந்தகுமாரி,துணை மேயர்மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ்,பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த. ஜெயகுமார், பம்மல் தெற்கு பகுதி நிர்வாகிகள் ப.காளேஸ்வரன், ஆர். உமாசங்கர், என்.பன்னீர் செல்வம், துரை.இளங்கோவன், பா.கவிதா,

பா.டில்லி, பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்திரன்,ரா.கோகுல்,சு.மனோகர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அதுசமயம் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகரபகுதி அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பான முறையில் வரவேற்பு அளித்திடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் வே.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் தலைமை! ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் மருத்துவ முகாம் - அறுசுவை உணவு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ .- நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன். 16 -

மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வட்டக் கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் பிறந்த நாளை முன்னிட்டு அஷ்டலட்சுமி நகர், 5 வது தெருவில் (போலீஸ் பூத் அருகில்) இன்று (16.6.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் மதியம் 1.00 மணி வரை, A4 மருத்துவமனை நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் ஆலப்பாக்கம் அய்யாவு நாயக்கர் தெருவில் மதியம் 11 மணிக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மதுரவாயில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

147வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்விக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொள்கிறார்.

ஆகவே மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக உறுப்பினர்கள் பல்வேறு அணியின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மதுரவாயல் வடக்கு பகுதி, 147-வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள் கூட்டம் இன்று (16.06.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் மதுராந்தகம் ஜி.எஸ்.டி. சாலையில் ஜெ.எம்.ஜெ. மெரினா மகாலில் எனது (க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையிலும் கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

எனவே, இக்கூட்டத்தில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சியின் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் – துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் நெடுஞ்சாலைத்துறையினரால் கட்டப்பட்டு வரும் மழைநீர் கால்வாய் அதேபோல மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை கால்வாயில் செல்லும் கழிவு நீர்சீராக செல்லாததால் பொதுமக்களிடமிருந்து வந்த புகார்களைத் தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி பல்லாவரம் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்று ஆய்வு மேற்கொண்டார். மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியினால் பாதாள சாக்கடை குழாய்கள் உடைப்பு ஏற்படாமல் பணிகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

### தாம்பரம் மாநகர திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்

# செயல்வீரர்கள் கூட்டம்!

## கழக பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழக தலைவரின் நாடும் நமதே! நாற்பதும் நமதே என்ற வெற்றி முழக்கத்தோடு பரப்புரை மேற்கொண்டு திராவிட மாடல் ஆட்சிக்கு அத்தாட்சியாக நடைபெற்று முடிந்த திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளராக போட்டியிட்ட கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மாபெரும் வெற்றி பெற களப்பணி ஆற்றிய கழக நிர்வாகிகளுக்கும், கழக தோழர்களுக்கும் நன்றி தெரிவித்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பொதுக்கூட்டங்கள் நடத்துவது குறித்து

தாம்பரம் மாநகர கழக செயல்வீரர்கள் கூட்டம் 16.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிழக்கு தாம்பரம் அன்னை பாத்திமா சமூக நலக்கூடத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு மாநகர அவைத்தலைவர், துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில் மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.இந்தரன், டி.காமராஜ் வரவேற்புரையில் மாநகர கழக நிர்வாகிகள் மேயர் க.வசந்தகுமாரி இரா.நரேஷ்கண்ணா, வ.விஜயரங்கன், பி.சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் கூட்டத்தில் நன்றி தெரிவித்து ஆலோசனைகள் வழங்கிட கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை தீர்மானக்கு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம் மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் என்.மருதுகணேஷ் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பார்யைாளர் க.அன்புசெல்வன் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.கே.விவேகானந்தன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மண்டலக்குழு தலைவர்கள் மாவட்ட கழக பிரதிநிகள் பகுதி கழக செயலாளர்கள் நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள் வட்ட கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்ஏ.**
செயலாளர்
தாம்பரம் மாநகர தி.மு.க




சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லயோலா மதன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.மாவட்டகழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். கழக மாணவரணி துணை செயலாளர் தமிழ் க. அமுதரசன் சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், மற்றும் பகுதி கழக செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.